# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 02 வெள்ளிக்கிழமை 14.02.2025 கதிர் 127







# யாழ். பல்கலை துணைவேந்தருக்கும் கலைப்பீடாதிபதிக்கும் எதிராக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு

யாழ்ப்பாணம், பெப். 14

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் எஸ்.சிறிசற்குணராஜா, கலைப்பீடாதிபதி பேராசிரியர் எஸ்.ரகுராம், மாணவர் ஒழுக்காற்று அதிகாரி ஆகியோருக்கு எதிராக கொழும்பு உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தின் 4ஆம் வருட சட்டத்துறை மாணவன் சி.சிவகஜன் என்பவர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி கலாநிதி கு.குருபரன் மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் 27ஆம் திகதி பல்கலைக்கழகத் துணைவேந்தரால்சட்டத்துறை மாணவன்சிவகஜனுக்கு வகுப்புத்தடை விதிக்கப்பட்டது. இந்த வகுப்புத் தடை யாழ்.



பல்கலைக்கழகக் கலைப் பீடாதி எஸ். ரகுராம் முன்வைத்த முறைப்பாட்டுக்கு அமைய விதிக்கப்பட்டுள்ளது என்று துணைவேந்தரால் மாணவனுக்கு வழங்கப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வகுப்புத் தடையைச் சவாலுக்குட்படுத்தியே சட்டத்துறை மாணவன் சிவகஜனால் இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தன்மீது பாரதூரமான அவதூறை ஏற்படுத்தும் வகையில் ஊடகங்களுக்கு சிவகஜன் செவ்வி வழங்கினார் என்று பேராசிரியர் ரகுராம் துணைவேந்தரிடம் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த முறைப்பாடு, பேராசிரியர் 7 ➤

## உள்ளூராட்சி அதிகார சபைகள் சட்டமூலம்:
# நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை சபைக்கு அறிவித்த சபாநாயகர்



கொழும்பு, பெப். 14

"உள்ளூராட்சி அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலத்தின் இரண்டு வாசகங்கள் அரசியலமைப்புக்கு முரணாகக் 7 ➤

# கஜேந்திரகுமாருக்குப் பிணை



யாழ்ப்பாணம், பெப். 14

தையிட்டியில் சட்டவிரோதமாகக் கட்டப்பட்ட விகாரையை ,டிக்க மக்கள் ஒன்று சேர வேண்டும் என்று சமூக ஊடகங்களில் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் பெயரைக் குறிப்பிட்டு பரப்பப்பட்ட துண்டுப் பிரசுரம் தொடர்பாக .ன்று வெள்ளிக்கிழமை நீதிமன்றத்தில் ஆஜரான நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்குப் பிணை வழங்கப்பட்டது.

தையிட்டி திஸ்ஸ விகாரையை ,டித்து அகற்ற சமூக ஊடகங்களில் துண்டுப் பிரசுரத்தைப் பரப்பினார்என்ற குற்றச்சாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தால் அழைப்புக் கட்டளை விடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், ,ன்று மல்லாகம் நீதிவான் 7 ➤

# யாழ். மாவட்ட செயலகத்துக்கு முன்னால் வேலையில்லாப் பட்டதாரிகள் போராட்டம்



யாழ்ப்பாணம், பெப். 14

வேலைவாய்ப்பை வழங்குமாறு கோரி வேலையில்லாப் பட்டதாரிகள் இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்துக்கு முன்னால் கவனயீர்ப்புப் 7 ➤

# தையிட்டி விகாரை விடயத்தை விரைவில் தீர்த்து வைப்போம்

## மீண்டும் இனவாதம் தலைதூக்க அனுமதியோம் என்று யாழில் அமைச்சர் சந்திரசேகர் திட்டவட்டம்



யாழ்ப்பாணம், பெப். 14

"உறக்கத்தில் உள்ள இனவாதத்தை மீண்டும் எழும்ப அனுமதிக்க முடியாது. அதனால் தையிட்டி விகாரை விவகாரத்தை விரைவில் தீர்த்து வைப்போம்." - என்று கடற்தொழில் அமைச்சர் சந்திரசேகர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 2025ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் நடைபெற்றது. 7 ➤

# நாடாளுமன்ற உறுப்பினரின் வாகனம் மோதி மோ. சைக்கிளில் பயணித்த ஒருவர் மரணம்

கொழும்பு, பெப். 14

கொஸ்வத்த, ஹால்தடுவன பிரதேசத்தில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து தொடர்பில் தேசிய மக்கள் சக்தி யின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற 7 ➤



# நீர் விநியோகம் துண்டிப்பு பொய்யானது



கொழும்பு , பெப். 14

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் விஜேராம மாவத்தையில் உள்ள உத்தியோகபூர்வ இல்லத்திற்கு நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதாக ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்தி பொய்யானது என, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

இந்தச் செய்தி தொடர்பிலான விசாரணையின் போது, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு அருகாமையில் உள்ள மற்றுமொரு இடத்தில் நிலுவைத்தொகை செலுத்தப்படாததன் காரணமாக நேற்று (13) நீர் விநியோகம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரியவந்ததாக சபை கூறியுள்ளது.

ஆனால் அந்த இடம் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லம் அல்ல என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகிந்த ராஜபக்சவின் பாதுகாப்பு திணைக்கள அதிகாரி ஒருவரிடம் நீர் வழங்கல் சபையின் பிரதிப் பொது முகாமையாளர் மேற்கொண்ட விசாரணையின் போது, முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள் அந்த இடத்தில் தங்கியிருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால் கடந்த ஆண்டு ஒக்டோபரில் அந்த இடத்தை விட்டு வெளியேறினர்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு உத்தியோகத்தரோ அல்லது முன்னாள் ஜனாதிபதியோ அந்த இடத்தில் உள்ள நீர் விநியோகத்தில் உள்ள தண்ணீரை பயன்படுத்தமாட்டார்கள் என பாதுகாப்பு அதிகாரி கூறியதாகவும், நீர் வழங்கல் சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, குறித்த இடத்தில் நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டமையால் முன்னாள் ஜனாதிபதிக்கோ அல்லது அவரது பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கோ எவ்வித இடையூறும் ஏற்படவில்லை என, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## நாமலின் சட்ட பரீட்சை: சி.ஐ.டி விசாரணை



கொழும்பு , பெப். 14

பாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ சட்டக் கல்லூரிப் பரீட்சைக்கு சட்டவிரோதமாகத் தோன்றியமை குறித்து குற்றப் புலனாய்வுத் துறை விசாரணையைத் தொடங்கியுள்ளது. பாஸ்டன்லங்கா சமூக ஊடக வலையமைப்பில் ஒளிபரப்பான நேர்காணலில் கூறப்பட்ட உண்மைகளின் அடிப்படையில், பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ இரண்டு வழக்கறிஞர்களின் உதவியுடன் சட்டக் கல்லூரியில் நடைபெற்ற தேர்வுக்கு ஆஜராகி சட்ட விரோதமாக சட்டப் பட்டம் பெற்றதாகக் கூறி, "லஞ்சம், ஊழல் மற்றும் வீண்விரயத்திற்கு எதிரான சிட்டிசன் பவர்" என்ற அமைப்பு குற்றப் புலனாய்வுத் துறையில் (சிஐடி) புககர் அளித்துள்ளது. மேற்கண்ட சம்பவம் குறித்து முறையான விசாரணை நடத்தப்பட்டு தேவையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று இந்த அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. அதன்படி, குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் விதிகளின்படி இது தொடர்பாக முழுமையான விசாரணையை நடத்துமாறு குற்றப் புலனாய்வுத் துறை பணிப்பாளருக்கு பதில் பொலிஸ் மா அதிபர் (ஜஜிபி ) அறிவுறுத்தியுள்ளார். இந்த விவகாரம் தொடர்பாக குற்றப் புலனாய்வுத் துறை விசாரணையைத் தொடங்கியுள்ளது (ஐ)

## CEBக்கு எதிர்க்கட்சியினர் விஜயம்



கொழும்பு , பெப். 14

இலங்கை மின்சார சபையின் (CEB) பிரதான கட்டுப்பாட்டு அறைக்கு, எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு இன்று விஜயம் செய்யவுள்ளதாக, பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் முக்கிய அரச நிறுவனங்களுக்குச்செல்லும் 'கவேஷன கரிகா'வை மேற்கொள்வதற்கு சமகி ஜன பலவேகய (SJB) பாராளுமன்றக் குழு எடுத்த தீர்மானத்திற்கு இணங்க இது அமைந்துள்ளது.

இலங்கை மின்சார சபைக்கான விஜயமானது நாட்டின் மின் உற்பத்தி தொடர்பான தற்போதைய நிலைமையைக் கண்டறிந்து தீர்மானிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது என, பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர். (ஐ)

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிமை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவனற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# யாழ். மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் , பெப். 14

2025 ஆம் ஆண்டிற்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் இடம் பெற்றுள்ளது.

இந்த கூட்டம் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் (Jaffna District Secretariat) இன்று யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான இராம லிங்கம் சந்திரசேகரன் (Ramalingam Chandrasekar) தலைமையில் நடை பெற்றுள்ளது.



இதன்போது பிரதேசங்களின் அபி விருத்தி தொடர்பில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அவற்றை நடைமுறைப்படுத்தும் அனுமதியை பிரதேச ஒருங்கிணைப்பு குழு இன்மையால் அதை நடைமுறைப்படுத்தும் அனுமதிக்காக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் விடப்பட்டது.

அபிவிருத்திக்காக யாழ்ப்பாணத்துக்கு 56 மில்லியன் நிதி ஒதுக்கீட்டை நாடாளுமன்ற உறுப்பினர்களை புறந்தள்ளி அரச அதிகாரிகள் ஊடாக முன்னெடுக்க மாவட்ட ஒருங்கிணைப்பு குழு எடுத்த முயற்சிக்கு கடும் எதிர்ப்பு காண்பிக்கப்படது. இதனையடுத்து சமர்ப்பிக்கப்பட முன்மொழிவு மாற்றியமைக்கப்பட்டு மீண்டும் சமர்பிக்க இணக்கப்பாடு எட்டப்பட்டது.

குறிப்பாக 2025 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தின் முன்னரான முன்மொழிவின் கீழ் ஒதுக்கப்பட்ட 56 மில்லியன் நிதியை மாவட்ட செயலகம் ஊடாக கையாள்வது என்ற முன்மொழிவு வைக்கப்பட்டபோது அதை ஏற்க முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் விவாதித்திருந்தார்.

நிதி திட்டமிடல் பொருளாதார அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் பிரதேச மட்டத்தில் எடுக்கப்படும் முன்மொழிவை மாவட்ட அபிவிருத்திக் குழுவுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் முன்னெடுத்தல் என்று கூறப்பட்டுள்ளது.

இது குறிப்பாக கடந்த 77 ஆண்டுகளாக நடைமுறையில் இருந்துவரும் அவிருத்தி தொடர்பான திட்ட முன்மொழிவு பொறிமுறையை இம்முறை மாற்றி நடளுமன்ற உறுப்பினர்கள் முன்மொழிவுகள் நிராக ரிக்கப்படுகின்றது. இது ஏற்றுக் கொள்ளப்பட முடியாது.

குறிப்பாக கடந்த ஆட்சியில் இவ்வாறான ஒரு நிலை கொண்டுவரப்பட்டது. ஆனால் அன்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அன்றைய ஒருங்கிணைப்பு குழுவின் தலைவராக இருந்த முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் அன்றைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் அவர் பேசி ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்ததன் அடிப்படையில் மேலதிகமாக நிதி ஒதுக்கீடு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

ஆனால் இன்று அவ்வாறான ஒரு நிலை இல்லாதுள்ளது. அந்தவகையில் நாடாளுமன்ற உறுப்பினர் ரீதியாக ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டங்கள் நடை முறைப்படுத்தப்படாத இந்த சமர்ப்பிப்பை ஏற்க முடியாது. இதை மாற்றியமைத்து நாடளுமன்ற உறுப்பினர்களது முன்மொழிவுகள் உள்ளடக்கபட வேண்டும் என வலியுறுத்தியிருந்தார்.

இந்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினரது வலியுறுத்தலுக்கு இணங்கிய ஒருங்கிணைப்பு குழு தலைவர் குறித்த 56 மில்லியன் நிதியில் 6 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட யாழ். மாவட்டத்தில் ஒருவருக்கு 9 மில்லியன் நிதி ஒதுக்கப்படுள்ளதுடன் அதனடிப்படையில் முன்வைக்கப்படும் திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் இணக்கம் காணப்பட்டது.

2025 ஆம் ஆண்டிற்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்த கூட்டம் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் (Jaffna District Secretariat) இன்று யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான இராம லிங்கம் சந்திரசேகரன் (Ramalingam Chandrasekar) தலைமையில் நடைபெற்றுள்ளது.

இதில் நிலத்தடி நீர் மாசடைதல், கழிவுகள் மீட்டெடுத்தல், நன்னீர் குடிநீர் திட்டம், சந்தைப்படுத்தல் உட்கட்டமைப்பு, உள்ளூர் கடன், உற்பத்திகள், தேசிய அபிவிருத்தி திட்டமிடல், ஒருங்கிணைந்த கிராமிய சமூக பொருளாதார கட்டமைபபினை வலுப்படுத்தல் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டன.

இக்கலந்துரையாடலில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் பொ.கஜேந்திரகுமார் , தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய வைத்தியர் வ.பவானந்தராஜா, பொ.ரஜீவன், இளங்குமரன்.

மற்றும் மேலதிக அரசாங்க காணி அதிபர் ஸ்ரீ மோகனன், திட்டமிடல் பணிப்பாளர் சுரேந்திரகுமார், வடமாகாண அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம், வடமாகாண ஆளுநரின் செயலாளர் நந்தகோபாலன், பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், பிரதேச சபை செயலாளர்கள், பதவிநிலை அதிகாரிகள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ஐ)

# தூதுவர் ஜூலி சங்கை எச்சரிக்கும் சரத் வீரசேகர

கொழும்பு , பெப். 14

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் பிரிவினைவாதிகளுடன் ஒன்றிணைந்து இலங்கையின் உள்ளக விவகாரங்களில் தலையிட்டுள்ளதாக சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் (SLPP) முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

அத்துடன் போராட்ட காலப்பகுதியிலும் அவர் முறையற்ற வகையில் செயற்பட்டதாகவும் அவரை மீண்டும் அமெரிக்காவுக்கு அழைக்குமாறு அமெரிக்க ஜனாதிபதிக்கு எழுத்து மூலமாக அறிவிப்போம் எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் பிரிவினைவாதத்துக்கு எதிரான கூட்டணியினர் கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்தின் முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுப்பட்ட போது அதில் கலந்துகொண்டு கருத்துரைக்கையிலேயே சரத் வீரசேகர இவ்வாறு குறிப்பிட்டார்.

இங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது, "இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் இலங்கையின் இறையாண்மைக்கும், சுயாட்சிக்கும் சவால் விடுக்கும் வகையில் செயற்பட்டுள்ளார். நாட்டின் உள்ளக விவகாரங்களில் தலையிட்டுள்ளார்.

அத்துடன் வியன்னா ஒப்பந்தத்தையும் மீறியுள்ளார். எமது அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தின் போது அமெரிக்க தூதுவர் முறையற்ற வகையில் செயற்பட்டார். பிரிவினைவாதிகளுடன் ஒன்றிணைந்து செயற்பட்டார். அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கினார்.

ஆகவே இவரை மீண்டும் அமெரிக்காவுக்கு அழைத்து விசாரணைகளை முன்னெடுக்குமாறு அமெரிக்க ஜனாதிபதியிடம் வலியுறுத்துகிறோம்.

பாலினம் தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு பயிற்சியளிப்பதற்காக அமெரிக்காவின் யு.எஸ்.எய்ட் (US Aid) நிறுவனம் பல மில்லியன் டொலர்களை செலவழித்துள்ளாக அமெரிக்காவின் புதிய அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் கலாசாரத்தை சீரழிப்பதற்காகவே இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஆகவே இவ்விடயம் குறித்து முறையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறும், நிதி பெற்றுக் கொண்டவர்களின் விபரங்களை பகிரங்கப்படுத்துமாறும் கேட்டுக் கொள்கிறோம்" என தெரிவித்தார். (ஐ)



# வரவு செலவு திட்டம் தயாரிப்பதற்கான கலந்துரையாடல்

கொழும்பு , பெப். 13

2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டம் தயாரிப்பதற்கான இறுதிக் கட்ட உத்தியோகபூர்வ கலந்துரையாடல், நேற்று பிற்பகல் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையில் நடை பெற்றது.

விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி. லால்காந்த, வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க, பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன மற்றும் அரசாங்க அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

இதன்படி, தயாரிக்கப்படும் 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)



# வாசனை திரவிய தொழிற்சாலையில் தீ

கொழும்பு , பெப். 13

ஹொரணையில் உள்ள வாசனை திரவிய உற்பத்தி தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக களுத்துறை பேரிடர் மேலாண்மை பிரிவு உறுதிப்படுத்தியுள்ளது. கொழும்பு மற்றும் களுத்துறை நகராட்சி மன்றங்களின் தீயணைப்பு படையினர், ஹொரண தீயணைப்பு படையினருடன் இணைந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். ஹொரண, போரலுகொட BOI தொழில்துறை தோட்டத்தில் உள்ள இலவங்கப்பட்டை அடிப்படையிலான வாசனை திரவிய உற்பத்தி நிலையமான வாசனை திரவிய உற்பத்தி தொழிற்சாலையில் வியாழக்கிழமை மாலை தீ விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)



## ஜெயலலிதா நகைகள் மதிப்பீடு செய்யும் பணிகள் தொடக்கம்

சொத்துக்குவிப்பு வழக்கில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவிடம் பறிமுதல் செய்யப்பட்ட தங்க, வைர நகைகளை மதிப்பீடு செய்யும் பணி, நீதிபதி மோகன் முன்னிலையில் தொடங்கியுள்ளது. தமிழக உள்துறை இணை செயலர் ஹனி மேரி, லஞ்ச ஒழிப்பு எஸ். பி., விமலா ஆகியோர் உடன் இருந்தனர்.

தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா. இவர், வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்த வழக்கு, பெங்களூரு சி.பி.ஐ., சிறப்பு நீதிமன்றத்தில் நடந்து வந்தது. அந்த வழக்கில் தொடர்புடைய தங்கம், வெள்ளி, வைர நகைகள் அடங்கிய ஆறு டிரங்க் பெட்டிகள், 1,562 ஏக்கர் மதிப்பிலான நில ஆவணங்கள், கர்நாடக அரசு கருவூலத்தில் வைக்கப்பட்டிருந்தன.

வழக்கு முடிந்து போன நிலையில், ஜெயலலிதாவுக்கு சொந்தமான நகைகள், சொத்து ஆவணங்களை தமிழக லஞ்ச ஒழிப்பு போலீசாரிடம் ஒப்படைக்கும்படி கர்நாடகா உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. அவற்றைப் பெற்றுக் கொள்வதற்காக தமிழக லஞ்ச ஒழிப்பு போலீஸ் படையினர், இன்று கர்நாடகா அரசு கருவூலம் சென்றனர்.

அங்கு நீதிபதி மோகன் முன்னிலையில் ஒவ்வொரு பெட்டியாக திறந்து, நகைகளை எண்ணி, மதிப்பீடு செய்யும் பணி தொடங்கியுள்ளது. தமிழக உள்துறை இணை செயலர் ஹனி மேரி, லஞ்ச ஒழிப்பு எஸ். பி., விமலா ஆகியோர் உடன் இருந்தனர். அனைத்தும் சரி பார்த்து பட்டியல் தயார் செய்தபிறகே, தமிழக லஞ்ச ஒழிப்புத்துறை போலீசாரிடம் நகைகள், ஆவணங்கள் ஒப்படைக்கப்படும்.

இதற்கிடையில், ஜெயலலிதாவின் பொருட்களை தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கூறி அவரது அண்ணன் மகள் மற்றும் மகன் தீபா, தீபக் உரிமை கொண்டாடினர். அவர்களது மனுவை கர்நாடகா உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. மேல்முறையீட்டு மனுவை உச்ச நீதிமன்றமும் இன்று தள்ளுபடி செய்து விட்டது. (ஐ)

## மக்களை சுரண்டிய ஆம்ஆத்மி பொறுப்பு முதல்வர் அதிஷிக்கு பா.ஜ., பதிலடி



டில்லியின் பல்வேறு பகுதிகளில் மின்வெட்டு நிலவுவதாக ஆம்ஆத்மி குற்றச்சாட்டுக்கு, பா.ஜ., பதிலடி கொடுத்துள்ளது.

இதனிடையே, புதிதாக ஆட்சிப் பொறுப்புக்கு வந்துள்ள பா.ஜ., அரசு மீது முன்னாள் முதல்வர் அதிஷி ஒரு குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். அதாவது, பா.ஜ., ஆட்சிக்கு வந்த பிறகு டில்லியில் 40க்கும் மேற்பட்ட இடங்களில் மின்வெட்டு ஏற்பட்டுள்ளதாக குற்றம்சாட்டியுள்ளார்.

செய்தியாளர்கள் சந்திப்பில் மேலும் அவர் கூறுகையில், 'ஆம்ஆத்மி ஆட்சியின்போது மின்வாரியத்துறை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வந்தது. தற்போது, பா.ஜ., ஆட்சிக்கு வந்த 3 நாட்களில் நிலைமை மாறி விட்டது. பா.ஜ.,வுக்கு எப்படி ஆட்சி செய்ய வேண்டும் என்பதே தெரியவில்லை. உத்தரப்ரதேசத்தைப் போல டில்லியிலும் நீண்ட நேர மின்வெட்டு நிலைமை உருவாக்குகின்றனர்,' எனக் கூறினார்.

ஆம்ஆத்மியின் இந்தக் குற்றச்சாட்டை மறுத்த பா.ஜ., மாநில தலைவர் விரேந்திர சச்தேவா, 'டில்லியில் மின்வெட்டு ஏதுமில்லை. ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை ஆதிஷி சுமத்தி வருகிறார். பல ஆண்டுகளாக தனியார் மின்விநியோக நிறுவனங்களுடன் இணைந்து ஆம்ஆத்மிஅரசு மக்களிடம் இருந்து சுரண்டியது டில்லி மக்களுக்கே நன்கு தெரியும். தற்போது, பா.ஜ., அதற்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டது. இதனால், தற்போது பொறுப்பு முதல்வராக இருக்கும் அதிஷி அச்சத்தில் இதுபோன்ற கருத்துக்களை கூறுகிறார்,' என்றார். (ஐ)



## அமெரிக்காவிலிருந்து இந்தியர்கள் நாடு கடத்தல்




அமெரிக்காவில் இருந்து நாடு கடத்தப்பட்டவர்களை அழைத்து வரும் 2வது விமானம் நாளை (பிப்ரவரி 15) பஞ்சாபில் தரையிறங்குகிறது.

அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறிய இந்தியர்களில், 104 பேரை முதற்கட்டமாக அந்நாட்டு வெளியுறவுத்துறை இந்தியாவுக்கு நாடு கடத்தியது. அமெரிக்க ராணுவ விமானத்தில் அனுப்பி வைக்கப்பட்ட அவர்கள், பஞ்சாபின் அமிர்தசரசுக்கு கடந்த பிப்., 5ம் தேதி வந்து சேர்ந்தனர். இந்த, 104 பேரில் பஞ்சாப், ஹரியானா மற்றும் உத்தர பிரதேசத்தைச் சேர்ந்தோர் பிரதானமாக இடம்பெற்று இருந்தனர்.

அவர்கள் அமெரிக்க விசா பெறுவதற்காக உள்ளூர் ஏஜன்டுகளை நம்பி, 50 லட்சம் ரூபாய் முதல் ஒரு கோடி ரூபாய் வரை பணம் கொடுத்து, ஏமாற்றப்பட்டதாக தெரிவித்தனர்.

முறையான விசா இன்றி வெவ்வேறு நாடுகள் வழியாக அழைத்து செல்லப்பட்டு, அமெரிக்காவில் அவர்கள் சட்ட விரோதமாக நுழைந்த கண்ணீர் கதைகளை பகிர்ந்து கொண்டனர்.

இந்நிலையில், 2வது விமானம் நாளை (பிப்.,15) பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸில் தரையிறங்குகிறது. ஏற்கனவே, '487 இந்தியர்களை வெளியேற்ற உத்தரவுகள் பிறப்பிக்கப் பட்டுள்ளதாக மத்திய வெளியுறவு துறை செயலாளர் விக்ரம் மிஸ்ரி உறுதிப்படுத்தி உள்ளார்.

இதற்கிடையே, 'குஜராத், ஹரியானாவில் விமானங்கள் ஏன் தரையிறங்கவில்லை' என பஞ்சாப் நிதியமைச்சர் ஹர்பால் சீமா கேள்வி எழுப்பி உள்ளார்.

மேலும் அவர், 'நாடு கடத்தப்பட்ட இந்தியர்களை ஏற்றிச் செல்லும் விமானங்கள் அமிர்தசரஸில் தரையிறங்குவதை உறுதி செய்வதன் மூலம் பஞ்சாபை அவதூறு செய்ய அரசாங்கம் விரும்புகிறது. ஹரியானா அல்லது குஜராத் மாநிலத்தில் ஏன் தரையிறங்க கூடாது? இது பஞ்சாபின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் பா.ஜ.,வின் முயற்சி என்பது தெளிவாகிறது. இந்த விமானம் ஆமதாபாத்தில் தரையிறங்க வேண்டும்,' என்றார். (ஐ)

## இளம்பெண் மீது ஆசிட் வீச்சு காதலர் தினத்தில் கொடூரம்

ஆந்திராவில் 23 வயது இளம்பெண் மீது வாலிபர் ஒருவர் ஆசிட் வீசி தாக்குதல் நடத்திய சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அன்னமய்யா மாவட்டம் குர்ரம்கொண்டா பகுதியில் 23 வயது இளம்பெண் மீது வாலிபர் ஒருவர் கத்தியால் குத்தியும், பிறகு ஆசிட்டை முகத்தில் வீசியும் தாக்குதல் நடத்தியுள்ளார்.

இதில் முகம், வாய், கழுத்து பகுதியில் பெரும் பாதிப்பு ஏற்பட்ட நிலையில், அங்குள்ள மருத்துவமனை ஒன்றில் இளம்பெண் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பாக தகவல் அறிந்த போலீசார், இது குறித்து விசாரணையை தொடங்கினர்.

முதற்கட்ட விசாரணையில், இந்த தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்ட வாலிபர் மதனப்பள்ளியைச் சேர்ந்த கணேஷ் என்பது தெரிய வந்துள்ளனர். மேலும், வரும் ஏப்.,29ம் தேதி தாக்குதலுக்கு உள்ளான இளம்பெண்ணுக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்ட நிலையில், இந்த சம்பவம் அரங்கேறியுள்ளது.

எனவே, இருவரிடையே ஏதேனும் காதல் பிரச்னையாக இருக்குமா? என்ற கோணத்தில் பொரிஸார்' விசாரணை நடத்தி வருகின்றனர். (ஐ)




# காண்பதெல்லாம் காதலடா!

உலகம் முழுவதும் பரவலாகவும் மிகச் சிறப்பாகவும் கொண்டாடப்படுவது காதலர் தினம். மேற்கத்திய பழக்கமாக இருந்தாலும் பின்னாளில் இந்த நாள் உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. முதன் முதலில் ரோமானிய மன்னர்களின் ஆட்சிக்காலத்தில்தான் காதலர் தினம் கொண்டாடப்பட்டதற்கான சான்றுகள் இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். காணும் அனைத்திலும் நிறைந்திருக்கும் இந்தக் காதல் தினத்தைப் பற்றிய பல சுவாரஸ்யமான தகவல்கள்...

### வலன்டைன்ஸ் தினம் எப்படி வந்தது :

ரோமாபுரி நாட்டில் கிளாடியுஸ் மிமி ஆட்சிக் காலத்தில் ஹதிருமணம் செய்வதால் ஆண்கள் வீரத்தை இழக்க நேரிடும். அவர்கள் போரில் சரியாகப் பங்களிக்கமாட்டார்கள், நாட்டு மக்கள் யாரும் இனி திருமணம் செய்து கொள்ளக்கூடாது. ஏற்கெனவே திருமணம் நிச்சயம் செய்யப்பட்டிருந்தவர்கள் கூடத் திருமணம் செய்யக் கூடாது' என்ற உத்தரவைப் பிறப்பித்தார். ஆனால், அரசரின் அறிவிப்பை மீறி பாதரியார் வலன்டைன் காதல் ஜோடிகளுக்கு திருமணம் செய்து வைத்தார்.

இந்தச் செய்தி நாடு முழுவதும் பரவியது. பல காதல் ஜோடிகள் அங்கு படையெடுத்தனர், அவர்களுக்கு வலன்டைன் திருமணம் செய்துவைத்தார். இந்தச் செய்தியை அறிந்த மன்னர், பாதிரியாரைக் கைது செய்து சிறையில் அடைக்க உத்தரவிட்டு, பின் அவருக்கு மரண தண்டனை விதித்தார். அவர் சிறையில் இருந்த காலகட்டத்தில் சிறைக் காவலரின் பார்வையற்ற மகள் அஸ்டோரியசுக்கும் அவருக்கும் காதல் மலர்ந்தது. தனக்குக் கண் பார்வை கிடைத்ததை போல, பல மடங்கு சந்தோஷத்தில் இருந்த அஸ்டோரியசுக்கு அடுத்த அதிர்ச்சி காத்திருந்தது. இவர்களின் காதல் விஷயம் தெரியவரவே, அவள் வீட்டில் சிறைவைக்கப்பட்டாள்.



வலன்டைனுக்கு தண்டனை நிறைவேற்றும் நேரம் வந்தது. தண்டனை நிறைவேறுவதற்கு முன் தன் காதலிக்கு ஒரு கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்தின் கடைசியில் ஹஹஉன்னுடைய வலன்டைனிடமிருந்து" என்ற வார்த்தை எழுதப்பட்டிருந்தது. அவர் கொல்லப்பட்ட அந்த நாள் கி.பி.270, பெப்ரவரி 14. இந்த நாளைத்தான் உலகம் முழுவதும் பின்னாளில் வலன் டைன்ஸ் தினமாகக் கொண்டாடுகிறார்கள் .

இந்த வரலாற் றுக்குப் பல்வேறு கதைகளும் உண்டு. ஆனால், பெரும்பாலும் பரவலாகப் பேசப்படு வது இந்தக் கதைதான். இதற்கான வரலாற்றுச் சான்றுகள் இதுவரை சரிவர கிடைக்கப் பெறவில்லை



### ஏழு நாள் கொண்டாட்டம்... வலன்டைன் டே வாரம்

## வலன்டைன்ஸ் தினம் உருவான கதை..

### ரோஸ் டே : பெப்ரவரி–7

இது, தங்களுக்குப் பிடித்தவர்களுக்கு ரோஜாவைக் கொடுத்து ஒருவர் தன் அன்பை, காதலை வெளிப்படுத்தும் நாள். காதலை வெளிப்படுத்த சிவப்பு ரோஜா, நட்பை வெளிப்படுத்த மஞ்சள் ரோஜா, சமாதானத்துக்கு வெள்ளை ரோஜா கொடுப்பது வழக்கம்.

### ப்ரப்போஸ் டே :பெப்ரவரி–8

நம் மனதுக்கு மிக நெருக்கமானவரிடம் நமது அன்பை, காதலை வெளிக்காட்டும் நாளாகும்.

### சோக்லேட் டே : பிப்ரவரி–9

இந்த நாளில் நமக்கு முக்கியமானவர்களுக்கு சோக்லேட் பரிசளித்து நமது அன்பை, பாசத்தை, காதலை அவர்களிடத்தில் வெளிப்படுத்தலாம்.

### டெடி டே : பெப்ரவரி–10

இந்த நாளில் டெடி பியர் பொம்மையைப் பிடித்தவர்களுக்குப் பரிசளித்து அன்பை வெளிப்படுத்தலாம். பெரும்பாலும் இந்த நாளில் காதலர்கள் மட்டுமல்லாது நண்பர்கள், நமக்குப் பிடித்தவர்கள், உடன் பிறந்தவர்கள் என்று பலரும் டெடி பியர் பொம்மைகளைப் பரிசளிப்பார்கள்.

### பிரோமிஸ் டே : பெப்ரவரி–11

இந்த நாளுக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. நமக்குப் பிடித்தவர்களிடம் அந்த உறவின் தன்மையையும், அந்த உறவுக்கான அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்தி, உறவின் உன்னதத்தை உறுதிப்படுத்தும் நாள்.

### ஹக் டே : பெப்ரவரி–12

உங்களின் அன்பை வெளிப்படுத்த உங்கள் வாழ்க்கையின் மிகமுக்கியமானவர்களை அரவணைக்கும் நாள். இந்த நாளில் தங்களின் வாழ்க்கை துணையை, நண்பர்களை, குடும்ப உறுப்பினர்கள் என்று அனைவரிடத்திலும் நீங்கள் உங்கள் அன்பை வெளிக்காட்டலாம்.

### கிஸ் டே : பெப்ரவரி–13

முத்தம் அன்பின் வெளிப்பாடு. இந்த முத்த தினத்தில், தங்களின் நெருக்கமானவருக்கு முத்தம் கொடுத்து அவர்களின் இந்த நாளைச் சிறப்பாக்குங்கள்.

### வலன்டைன்ஸ் டே : பிப்ரவரி–14

ஏழு நாள் கொண்டாட்டத்தின் இறுதி நாள் இது.

(7ஆம் பக்கம் பார்க்க...)



# பிரிக்ஸ் அமைப்பு செத்துப் போய்விட்டது: டிரம்ப்

டாலருக்கு போட்டியாக பொது கரன்சியை உருவாக்க முயற்சிக்கும் பிரிக்ஸ் அமைப்பு செத்துப் போய்விட்டது என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென் ஆப்ரிக்கா ஆகிய நாடுகள் அடங்கிய கூட்டமைப்பு, 'பிரிக்ஸ்' என்றழைக்கப்படுகிறது. இந்தோனேசியா, அரபு நாடுகள் சிலவும் இந்த அமைப்பில் புதிதாக இணைந்துள்ளன.

சர்வதேச வர்த்தகத்தில் அமெரிக்கா டாலருக்கு மாற்றாக சொந்தமாக பிரிக்ஸ் நாணயத்தை உருவாக்க வேண்டும் என்பது இந்த அமைப்பின் ஆரம்ப கால திட்டங்களில் ஒன்றாக இருந்தது. டாலருக்கு மாற்று உருவாக்கும் முயற்சிக்கு, அமெரிக்கா அதிபர் டிரம்ப் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்.

இந்த சூழலில், பிரிக்ஸ் அமைப்பில் உறுப்பினராக உள்ள இந்தியாவின் பிரதமர் மோடி, அமெரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தார். அவரை அதிபர் டிரம்ப் இன்று சந்தித்து பேசினார்.

இந்த சந்திப்புக்கு முன்பாக பிரிக்ஸ் அமைப்புக்கு அதிபர் டிரம்ப் எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளார். அவர் கூறியிருப்பதாவது: அமெரிக்க டாலருக்கு போட்டியாக தனி கரன்சியை உருவாக்க நினைததால், 100 சதவீத வரிவிதிப்பை எதிர்கொள்ள நேரிடும். டாலருடன் விளையாட வேண்டாம்.

இதனை நாங்கள் செய்தே தீருவோம் என்று சொல்லும் நாளில், அவர்கள் (பிரிக்ஸ்) என்னிடம் வந்து கெஞ்சும் நிலை உருவாகும்.

பிரிக்ஸ் அமைப்பு செத்துப் போய்விட்டது. இவ்வாறு அவர் கூறினார். டிரம்ப்பின் இந்தப் பேச்சு பிரிக்ஸ் அமைப்பில் இடம்பெற்ற நாடுகள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

# போராட்டக்காரர்கள் மீது பாய்ந்த கார் 28 பேர் படுகாயம்



ஜெர்மனியில், போராட்டம் நடத்தியவர்கள் மீது கார் பாய்ந்த சம்பவத்தில், 28 பேர் படுகாயம் அடைந்தனர்.

ஜெர்மனியின் தென் பகுதியில் அமைந்துள்ள மியூனிச் நகரில் பாதுகாப்பு தொடர்பான சர்வதேச உச்சி மாநாடு நடக்கிறது. இதற்காக உலக தலைவர்கள் வந்து கொண்டிருக்கும் நிலையில், இந்த சம்பவம் நடந்துள்ளது.

பொதுத்துறை நிறுவன ஊழியர்கள், பல்வேறு கோரிக்கையை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பியபடி இருந்த நேரத்தில், அதிவேகத்தில் வந்த கார் அவர்கள் மீது பாய்ந்துள்ளது. இதில் 28 பேர் படுகாயம் அடைந்தனர்.

அங்கிருந்த போலீசார், கார் ஓட்டி வந்த 24 வயது நபரை கைது செய்தனர். அவர், ஆப்கானை சேர்ந்த அகதி என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது.

அவர், இதற்கு முன், திருட்டு, போதைப்பொருள் தொடர்பான குற்றங்களில் ஈடுபட்டவர் என்றும் போலீசார் தெரிவித்தனர்.

இதையடுத்து சர்வதேச மாநாடு நடக்கும் இடத்தில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

கூட்டத்தினர் மீது பாய்வதற்கு முன்னதாக, காரின் வேகம் அதிகரித்ததாக நேரில் பார்த்தவர் தெரிவித்தார். மேலும், கார் நிற்காமல் செல்வதை கண்டதும், அங்கிருந்த போலீஸ் அதிகாரி ஒருவர், அதன் மீது துப்பாக்கிச்சூடும் நடத்தியுள்ளார். (ஐ)

# பயங்கரவாதி ராணாவை இந்தியாவுக்கு நாடு கடத்த அதிபர் டிரம்ப் ஒப்புதல்




பயங்கரவாதி தஹாவூர் ராணாவை இந்தியாவுக்கு நாடு கடத்த அமெரிக்கா அதிபர் டொனால்டு டிரம்ப் ஒப்புதல் அளித்துள்ளார்.

மஹாராஷ்டிராவின் மும்பையில், 2008ம் ஆண்டு பாகிஸ்தான் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில், ஆறு அமெரிக்கர்கள் உட்பட 166 பேர் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலில் தொடர்புடைய லஷ்கர் - இ - தொய்பா அமைப்புக்கு உதவியதாக பாக்., வம்சாவளியைச் சேர்ந்த தஹாவூர் ராணா மீது குற்றச்சாட்டு வைக்கப்பட்டது. அமெரிக்க கோர்ட்டில் நடந்த இந்த வழக்கில், கடந்த 2013ல் ராணாவுக்கு 14 ஆண்டு சிறைதண்டனை விதிக்கப்பட்டது.

இதற்கிடையே ராணாவை நாடு கடத்தக் கோரி அமெரிக்காவிடம் நம் நாட்டு அரசு கோரிக்கை வைத்தது. இதையேற்று, நாடு கடத்த நீதிமன்றம் 2023ல் உத்தரவு பிறப்பித்தது. நாடு கடத்தலுக்கு தடை கோரி அமெரிக்க உச்ச நீதிமன்றத்தில் ராணா மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்திருந்தான். இந்த மனுவை நிராகரித்த உச்ச நீதிமன்றம், இந்தியாவுக்கு நாடு கடத்த அனுமதி வழங்கியது.

இதன் வாயிலாக, நாடு கடத்தலுக்கு எதிராக ராணா மேற்கொண்ட கடைசி முயற்சியும் தோல்வியில் முடிந்தது. ராணாவை நாடு கடத்தி கொண்டு வர என்.ஐ.ஏ., குழுவினர் ஏற்பாடு செய்து வருகின்றனர். தற்போது, ராணாவை இந்தியாவுக்கு நாடு கடத்த அமெரிக்கா அதிபர் டொனால்டு டிரம்ப் ஒப்புதல் அளித்துள்ளார். இது குறித்து, டொனால் டிரம்ப் கூறியதாவது:

சதித்திட்டம் தீட்டியவர்களில் ஒருவரையும், உலகின் மிகவும் தீயவர்களில் ஒருவரையும், மும்பை பயங்கரவாதத் தாக்குதலுடன் தொடர்புடையவரையும் இந்தியாவில் நீதியை எதிர்கொள்ள நாடு கடத்துவதற்கு எனது நிர்வாகம் ஒப்புதல் அளித்துள்ளது என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். அவர் நீதியை எதிர்கொள்ள இந்தியா திரும்புகிறார்.

உலகம் முழுவதும், பயங்கரவாத அச்சுறுத்தலை எதிர்கொள்ள இந்தியாவும், அமெரிக்காவும் முன்னெப்போதும் இல்லாத வகையில் இணைந்து செயல்படும். பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதில் நாங்கள் ஒத்துழைப்போம். எல்லை தாண்டிய பயங்கரவாதத்திற்கு எதிராக கடுமையான நடவடிக்கை தேவை. இவ்வாறு அவர் கூறினார். பயங்கரவாதி தஹாவூர் ராணாவை நாடு கடத்த முடிவு செய்ததற்காக, அதிபர் டிரம்பிற்கு பிரதமர் மோடி நன்றி தெரிவித்துள்ளார். (ஐ)

# பரஸ்பர வரி: டிரம்ப் அறிவிப்பால் பரபரப்பு

*அமெரிக்க பொருட்களுக்கு அதிக வரி விதிக்கும் நாடுகளுக்கு, பதிலுக்கு வரி விதிக்கப் போகிறேன்," என்று அதிபர் டிரம்ப் கூறியுள்ளார்.*

*அமெரிக்க அதிபர் டிரம்ப் தேர்தல் பிரசாரத்தின் போது, அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு அதிக வரி விதிக்கப்படுவதாக குற்றம்சாட்டி வந்தார். குறிப்பாக இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகள் மீது புகார் கூறினார்.*

*தொடர்ந்து அதிபரான பிறகு, மெக்சிகோ, சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு கூடுதல் வரி விதித்து உத்தரவிட்டு உள்ளார். இதற்கு அந்நாடுகள் பதிலடி கொடுத்து உள்ளன.*

*இந்நிலையில், டிரம்ப் சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவில் கூறியுள்ளதாவது: மூன்று சிறந்த வாரங்கள். ஆனால், இதுவரை இல்லாத சிறந்ததாக இருக்கலாம். ஆனால், இன்று தான் பெரியது. பரஸ்பர வரி. அமெரிக்காவை சிறந்தது ஆக்குவோம். இவ்வாறு அதில் கூறியுள்ளார். (ஐ)*

## கஜேந்திர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றத்தில் ஆஜரான நாடாளுமன்ற உறுப்பினரை ஓர் ,லட்சம் ரூபா சொந்தப் பிணையில் விடுவித்த நீதிவான் வழக்கை ஜூன் 26 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

நாடாளுமன்ற

உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சார்பில் சட்டத்தரணி மகிந்தன் நீதிமன்றத்தில் ஆஜராகினார்.

தையிட்டியில் சட்டவிரோதமாகக் கட்டப்பட்ட விகாரையை ,டிக்க மக்கள் ஒன்று சேர வேண்டும் என்று சமூக ஊடகங்களில் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் பெயரைக் குறிப்பிட்டு பரப்பப்பட்ட துண்டுப் பிரசுரம் தொடர்பாக பலாலி பொலிஸார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீது குற்றஞ்சாட்டி வழக்குப் பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

.இதேவேளை, குறித்த துண்டுப்பிரசுரம் சமூக வலைத்தளங்களில் பரப்பப்பட்ட நிலையில் அது போலியானது எனத் தெரிவித்து ஊடகச் சந்திப்பொன்றில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெளிவுபடுத்தியதுடன் தனது சமூக வலைத்தளங்களிலும் போலிச் செய்தி எனக் குறிப்பிட்டு பகிர்ந்திருந்தார்.

## யாழ்.பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எஸ்.ரகுராம் கலைப்பீடாதிபதி பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்த மறுநாளே வழங்கப்பட்டுள்ளது.

பின்னணி

கலைப்பீடத்தில் பாடத் தெரிவில் வெளிப்படையான ஒரு முறைமை கடைப்பிடிக்கப்படவில்லை என்பது தொடர்பில் வட்ஸ் அப் செயலியில் கருத்துத் தெரிவித்த மாணவர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கையாகும். இந்த விடயத்தில் முறைப்படி அமைக்கப்பட்டிருந்த ஒழுக்காற்று விசாரணைக் குழு, இரு மாணவர்களுக்கு எச்சரிக்கை ஒன்றை வழங்குவது என்று மட்டுமே தீர்மானித்திருந்தது. ஆனால், கலைப்பீடாதிபதியின் வலியுறுத்தலுக்கு அமைய ஒரு வருடத்துக்கு மாணவ நிலையிலிருந்து அவர்களை இடைநிறுத்தும் தண்டனை வழங்கப்பட்டது.

அதேவேள, விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியத்தின் தலைவராலும், துணைத்தலைவராலும் மாணவர்கள் பூட்டை உடைத்தது தொடர்பானது. பலமுறை கூறியும் அந்தப் பூட்டுத் திறக்கப்படாததால் பூட்டை உடைத்த குற்றச்சாட்டுக்காக அவர்களுக்கும் வகுப்புத் தடை தண்டனை வழங்கப்பட்டிருந்து.

அத்துடன்பரமேஸ்வரன் ஆலயத்துக்கு அண்மையில் மாணவர்களுக்கு இடையே ஏற்பட்ட பதற்ற நிலைமை தொடர்பானது. இந்த விடயத்தில் முறைப்படி அமைக்கப்பட்ட விசாரணைக் குழு, ஒரு மாணவனுக்கு எதிராக மட்டும் மதுபோதையில் இருந்தார் என்று தெரிவித்து ஒரு வருடம் மாணவ நிலையில் இருந்து இடைநிறுத்த வேண்டும் என்று முன்மொழிந்திருந்தது. ஆனால், போராசிரியர் ரகுராமின் அழுத்தத்தின் அடிப்படையில் ஒழுக்காற்று சபை 5 மாணவர்களுக்கு எதிராகவும் ஒரு வருட இடைநிறுத்த தண்டனையை வழங்கியது.

குறித்த மூன்று விடயங்களும் யாழ். பல்கலைக்கழ மாணவர் ஒன்றியத்தின் செயலாளராக அண்மைக்காலம்வரை செயலாற்றிய சி.சிவகஜனால் விமர்சனத்துக்கு உட்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## நாடாளுமன்ற

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் மொஹமட் பைசாலின் சகோதரரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் மொஹம்மட் பைசால் நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொள்வதற்காக வந்து கொண்டிருந்த வேளையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் பயணித்த கார் வீதியை விட்டு விலகி எதிர்த்திசையில் வந்த மோட்டார் சைக்கிள் மீது மோதியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் உயிரிழந்துள்ளார்.

விபத்து இடம்பெற்றபோது குறித்த காரை நாடாளுமன்ற உறுப்பினரின் சகோதரர் செலுத்தி வந்துள்ள நிலையில், கொஸ்வத்தை பொலிஸார் அவரைக் கைது செய்துள்ளனர்.

## யாழ்.மாவட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் பட்டதாரிகள் கடந்த சில வாரங்களாகத் தொடர்ச்சியாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இன்று 2025ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் வேலைத் திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. அதில் அமைச்சர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். இதன்போதே மாவட்ட செயலகத்துக்கு முன்னால் பட்டதாரிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## தையிட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போது மேற்கண்டவாறு கூறிய அமைச்சர் தொடர்ந்து குறிப்பிடுகையில்,

“தையிட்டி விகாரை விவகாரம் விரைவில் முடிக்கப்பட வேண்டும். இல்லையெனில் எதிர்காலத்தில் பாரிய விளைவுகளை அது ஏற்படுத்தும்.

உறக்கத்தில் உள்ள இனவாதத்தை மீண்டும் எழும்பவிடக் கூடாது. அதனால் அடிப்படையில் இவ்வாறான பிரச்சினைகள் உருவாகுவதை அனுமதிக்க முடியாது.

விகாரை விவாகரத்தில் பாதிக்கப்பட்ட காணி உரிமையாளர்கள், அப்பிரதேச மக்கள், மத தலைவர்கள், சிவில் சமூக பிரதிநிதிகள் முதலிய தரப்பினர்களுடன் விரைவில் பேசவுள்ளோம்.

விகாரை கட்டப்பட்டுள்ள காணியை மாத்திரம் தருமாறும், விகாரையைச் சுற்றியுள்ள ஏனைய காணிகளை மக்களிடம் மீள கையளிக்கத் தயாராக உள்ளதாகவும் விகாராதிபதி தெரிவித்துள்ளார்.

எனவே, விகாரை விவகாரத்தில் யாருக்கும் பாதிப்பில்லாத வகையில் அதனை தீர்க்க விரைந்து நடவடிக்கை எடுப்போம்.” - என்றார்

## நீதிமன்ற..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணப்படுவதால் அவை விசேட பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும். அத்துடன் சட்டமூலத்தின் ஏனைய வாசகங்களை சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முடியும்.” - என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

நாடாளுமன்றம் இன்று வெள்ளிக்கிழமை சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் கூடியது. இதன்போது உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பினை சபாநாயகர் சபைக்கு வருமாறு அறிவித்தார்.

அரசியலமைப்பின் 12 (1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்டு மூன்று நீதியரசர்கள் கொண்ட குழாமின் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட ‘ உள்ளூர் அதிகார சபைகள் ( விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை சபைக்கு அறிவிக்கிறேன்.

சட்டமூலம் முழுமையாகவும், மற்றும் குறிப்பாக 2 மற்றும் 3 ஆம் வாசகங்கள் அரசியலமைப்பின் 12 (1) ஆம் உறுப்புரையுடன் முரண்படுவதால், அரசியலமைப்பின் 84 (2) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கிணங்க விசேட பெரும்பான்மையின் ஊடாக நிறைவேற்றப்பட வேண்டும் என்று நீதியரசர்கள் குழாமில் பெரும்பான்மையினராகிய இரண்டு நீதியரசர்கள் தீர்ப்பளித்துள்ளனர்.

நீதியரசர் குழாமில் மீதமுள்ள ஒரு நீதியரசர், சட்டமூலம் முழுமையாகவும் அல்லது அதன் எந்தவொரு ஏற்பாடும் அரசியலமைப்புடன் முரண்படவில்லையென்பதால் அதனைப் பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையொன்றினால் நிறைவேற்ற முடியும் என தீர்ப்பளித்துள்ளார் என நீதிமன்றத்தின் தீர்ப்பின் சாராம்சத்தின் பொழிப்பினை வாசித்து நிறைவு செய்தார்.

அத்துடன் உயர்நீதிமன்றத்தின் முழுமையான தீர்ப்பு இன்றைய கூட்ட நடவடிக்கைகள் பற்றிய அதிகார அறிக்கையில் பதிப்பிட வேண்டும் என்று கட்டளையிட்டார்.

2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09 ஆம் திகதி நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கான தேர்தல் வாக்கெடுப்பு நிதி நெருக்கடி மற்றும் இரத காரணிகளால் பிற்போடப்பட்டது.இவ்வாறான நிலையில் சிவில் அமைப்பினர் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி ஆகிய அரசியல் கட்சிகள் தேர்தல் பிற்போடப்பட்டமைக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுக்களை தாக்கல் செய்தது.

இந்த மனுக்களை விசாரணைக்கு எடுத்துக் கொண்டதன் பின்னர் கடந்த ஆண்டு நடுப்பகுதியில் ‘ உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் பிற்போடப்பட்டதால் நாட்டு மக்களின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது. ஆகவே வெகுவிரைவில் தேர்தலை நடத்துமாறு ‘ உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இவ்வாறான பின்னணியில் ஏற்றுக் கொண்ட வேட்புமனுக்களுக்கு அமைய தேர்தலை நடத்துவதில் சிக்கல் காணப்படுவதாக அரசியல் கட்சிகள் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் வலியுறுத்தின. நடைமுறை விடயங்களை கருத்திற் கொண்டு ஏற்றுக் கொண்ட வேட்புமனுக்களை இரத்துச் செய்து புதிதாக வேட்புமனுக்களை கோருவதற்கு அரசாங்கம் தீர்மானித்து, அதற்காக உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் சட்டத்தை திருத்தம் செய்யும் வகையில் உள்ளூர் அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலத்தை சமர்ப்பித்தது.

இந்த சட்டமூலத்தை சவாலுக்குட்படுத்தி உயர்நீதிமன்றத்தில் 4 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பினை சபாநாயகர் இன்றையதினம் சபைக்கு அறிவித்தார். சட்டமூலத்தின் மீதான இரண்டாம் வாசிப்பு திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

# காண்பதெல்லாம்..........

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)



உலகின் அதிகப்படியான மக்களால் கொண்டாடப்படும் நாளும் இதுவே. வலன்டைனை நினைவு கூறும் வகையில் இந்த நாள் கொண்டாடப்படும் . காதலர்களுக்கு இந்த நாள் மிக முக்கியமான நாள். உங்கள் காதலை வெளிப்படுத்த இதுவே சிறந்த நாள்.

### வலன்டைன்ஸ் டே அன்று எந்த நிற ஆடை அணிந்தால் என்ன அர்த்தம்...

பச்சை:

உங்கள் காதலுக்காகவே காத்திருக்கிறேன்.

நீலம்:

நான் இதுவரை யாரையும் காதலிக்கவில்லை. யார் வேண்டுமானாலும் காதலைச் சொல்லலாம்.

மஞ்சள்:

ஏற்கெனவே காதலில் தோல்வி அடைந்தவர்.

கறுப்பு:

காதலில் எனக்கு விருப்பம் இல்லை. சொல்லும் காதல் நிராகரிக்கப்படும்.

ஒரேன்ச்

இன்று என் காதலை சொல்லப்போகிறேன்.

பிங் நிற உடை :

காதல் ஏற்றுக்கொள்ளப்படும்.

கிரே நிற உடை:

காதலில் ஆர்வம் இல்லை.

வெள்ளை நிற உடை:

ஏற்கனவே காதலிக்கிறேன்.

### சில வரலாற்று காதல் நிகழ்வுகள் :

1415 இல் அஜன்கோர்ட் போரில் சிறைபிடிக்கப்பட்டு இங்கிலாந்து சிறையில் இருந்த சார்லஸ் டக் ஆப் ஓர்லன்ஸ் தன் மனைவிக்கு எழுதிய காதல் கவிதை இன்றும் பிரிட்டிஸ் நூலகத்தில் பாதுகாக்கப்பட்டுவருகிறது. இதுவே உலகின் மிகவும் பழைமையான காதல் கவிதை.

1477 இல் மார்கெரி பிரேவ்ஸ் தன் வருங்கால மனைவிக்கு எழுதிய காதல் கடிதம். இன்றும் பிரிட்டிஸ் நூலகத்தில் பாதுகாக்கப்பட்டுவருகிறது. இதுவே பழைமையான காதல் கடிதம்.

1490 இல் கைகளால் செய்யப்பட்ட முதல் காதல் வாழ்த்து அட்டை.

1497 இல் அச்சடிக்கப்பட்ட முதல் காதல் வாழ்த்து அட்டை. இது லண்டனில் உள்ள தி யார்க் காஸ்டில் அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது.







இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.02.2025 இல் வெளியிடப்பெற்றது.